www.Padasalai.Net www.TrbTnpsc.com

சுருக்கம்

பள்ளிக் கல்வித் துறை - மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் வழங்கப்படும் பயிற்சிகளை அரசு பள்ளிகளில் அமைக்கப்பட்டுள்ள உயர் தொழில் நுட்ப ஆய்வகங்கள் வாயிலாக 2024-2025-ஆம் கல்வியாண்டு முதல் குறைந்த பட்சம் 75% பயிற்சிகளை இணைய வழியிலான பயிற்சியாக நடத்த திட்டமிடல் - மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநரை அறிவுறுத்துதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வித் (கஆப) துறை

அரசாணை (ப) எண். 46 — நாள் 05.02.2024

திருவள்ளுவர் ஆண்டு 2055

சோபகிருது வருடம், தை 22

படிக்கப்பட்டவை:

*** *** ***

**ஆணை**

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் பள்ளிக் கல்வியின் சீரான செயல்பாட்டினை உறுதி செய்வதற்காக கீழ்க்காணும் பல்வேறு பயிற்சிகளை வழங்கி வருகிறது.

(i) ஆசிரியப் பயிற்சி பெறுபவர்களுக்குப் பணி முன் பயிற்சி அளித்தல்.

(ii) பணியாற்றும் ஆசிரியர்களுக்குப் பணித்திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்குதல்.

(iii) நிர்வாக அலுவலர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்குதல்.

(iv) கற்றல் விளைவுகள் அடிப்படையிலான கற்றலை உறுதி செய்வதற்காக கல்விசார் அங்கத்தினர் அனைவருக்கும் அனைத்து பாடங்கள் மற்றும் அனைத்து வகுப்புகளுக்கான கற்றல் விளைவுகள் சார்ந்த பயிற்சிகளை வழங்குதல்.

Padasalai.Net

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

2. மேற்காண் பயிற்சிகளுக்காக ஒரே நேரத்தில் அனைத்து பயிற்சியாளர்களையும் அழைத்து பயிற்சி நடத்தப்படும்போது கீழ்க்குறிப்பிட்டுள்ள சில சிரமங்கள் ஏற்படுகின்றன என அறிய வருகின்றன:-

பயிற்சி அளிப்பதற்கு தேவையான அனைத்து வசதிகளும் உள்ள பயிற்சி கூடங்கள் மிக குறைவாகவே உள்ளன.

பயிற்சி பெற உள்ளவர்கள் உண்டு உறைவிட பயிற்சிக்காக தங்கள் பணியிடத்திலிருந்து பிற ஊர்களுக்கு வரவேண்டி இருப்பதால் நீண்ட தூரப் பயணங்களை மேற்கொள்ள வேண்டி உள்ளது.

மேலும் பயிற்சி பெறுபவர்களில் பெரும்பாலானோர் பெண் பணியாளர்களாக இருப்பதால் சில சிரமங்களை மேற்கொள்கின்றனர்.

மேலும், ஆசிரியர்கள் பயிற்சிக்காக வெளி இடங்களுக்கு செல்லும்போது மாணவர்களுக்கு கற்றல், கற்பித்தல் பணிகளில் தொய்வு ஏற்படுகிறது.

பயிற்சி காலத்தில் மாற்று ஏற்பாடு செய்வதற்கு தேவையான கூடுதல் ஆசிரியர்கள் இல்லா நிலை உள்ளது.

3. மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் அளிக்கப்படும் பயிற்சிகளுக்கான தங்குமிட வசதிகள், சுகாதாரமான உணவு, அனைவரும் வந்து செல்வதற்கான போக்குவரத்து வசதி போன்ற பல்வேறு காரணங்களால் அப்பயிற்சிகளை அந்தந்த மாவட்ட அளவிலேயே நடைபெற வலியுறுத்தி பல்வேறு மனுக்கள் அரசுக்கு வரப்பெற்றுள்ளன.

4. வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களை அறிந்து கொண்டு அரசுப் பள்ளி மாணவர்கள் போதிய கணினி திறன்களை பெறும் வகையில் தமிழ்நாடு முழுவதும் உள்ள அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உயர் தொழில் நுட்ப ஆய்வகங்கள் நிறுவப்பட்டு ஒவ்வொரு பள்ளியிலும் சராசரியாக பத்து முதல் இருபது கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. தொலைத் தொடர்பு சேவை வழங்குநர் (TSP) அல்லது இணைய சேவை வழங்குநர் (ISP) உடன் இணைந்து கணினி ஒருங்கிணைப்பாளரால் இணைப்பு வழங்கப்படுகிறது. இதேபோல், புரொஜெக்டர்களும் வழங்கப்பட்டுள்ளன. இந்த உயர் தொழில்

நுட்ப ஆய்வகங்கள் மதிப்பீடுகள் செய்வதற்கு மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. தற்போது அனைத்து உயர் தொழில் நுட்ப ஆய்வகங்களிலும் 100 Mbps அகன்ற அலை வரிசை (Broad Band) இணைப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன. EMIS மற்றும் PMU குழுக்களுக்கு அனைத்து கற்றல் மேலாண்மை அமைப்பு உள்ளடக்கங்களை இணையத்தில் பதிவேற்ற அறிவுறுத்தப்பட்டுள்ளன. இதனால் மாணவர்கள் அவற்றை ஆய்வகங்களில் இருந்து எளிதில் பெற்று கொள்ள முடியும். மேலும், 7,000 தொடக்கப் பள்ளிகள் மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 100 Mbps அகன்ற அலை வரிசை யுடன் (Broad Band) கூடிய உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் அமைக்கப்பட உள்ளன. 22,000 தொடக்கப் பள்ளிகள் மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் திறன் வகுப்பறைகள் அமைக்கப்பட உள்ளன.

5. மேற்காண் தகவல் தொழில் நுட்ப முன்னெடுப்புகளை முழுமையாக பயன்படுத்தி, தரமான கல்வியை அனைத்து குழந்தைகளும் பெற்று தமிழ்நாட்டின் பள்ளிக் கல்வித் துறையில் மிகப் பெரிய வளர்ச்சியை ஏற்படுத்தும் விதமாகவும், தற்போதைய சூழ்நிலையில், பயிற்சி பெற உள்ள ஆசிரியர்கள் / கல்வியாளர்கள் / அலுவலர்கள் மற்றும் பலர் வெளியிடங்களுக்கு சென்று பயிற்சி பெறுவதை விட தாங்கள் பணிபுரியும் பள்ளிகளில் அமைக்கப்பட்டுள்ள உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் அல்லது அந்தந்த மாவட்டங்களில், அவர்கள் பணிபுரியும் இடங்களுக்கு அருகில் உள்ள பள்ளிகளில் அமைக்கப்பட்டுள்ள உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் வாயிலாக இணைய வழியில் பயிற்சியினை பெறுவது எளிதாக இருக்கும் என அரசால் கருதப்பட்டு, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் 2024-2025-ஆம் கல்வியாண்டு நடத்திட உத்தேசித்துள்ள பயிற்சிகளில் குறைந்தபட்சம் 75% பயிற்சிகளை இணைய வழியிலான பயிற்சியாகவும் மீதமுள்ள பயிற்சிகளை நேரடியான பயிற்சியாகவும் வழங்குவதற்கு திட்டமிட்டுக் கொள்ளுமாறு மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநரை அறிவுறுத்தி அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெ.குமரகுருபரன்
அரசு செயலாளர்

**பெறுநர்**

இயக்குநர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை-06.

Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com

**நகல்**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின்

நேர்முக உதவியாளர், சென்னை-09.

பள்ளிக் கல்வித் துறை செயலாளர் அவர்களின்

முதுநிலை தனிச் செயலாளர், சென்னை-09.

இருப்பு கோப்பு / உதிரி நகல்

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

5/2/2024

**பிரிவு அலுவலர்**

05/2/24

Padasalai.Net

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com